IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
MCOP 89/2022

Deposition of RW 1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 09.01.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | வெங்கடேசன் | **Caste** | : | |
| **S/o.** | : | முனியப்பன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் பவானியில் குடியிருக்கிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். விபத்து தேதியான 30.1.2022 ந்தேதியன்று எனக்கு சொந்தமான டிராக்டர் TN 36 6089 என்ற வாகனத்தை நான் ஓட்டி சென்றபோது விராலிக்காடு அருகில் பஞ்சராகி நிறுத்தியிருந்தேன். அப்போது இருசக்கர வாகனம் TN93 B 5623 என்ற வாகனத்தில் 3 பேர் பயணம் செய்து டிராக்டரில் மோதி விபத்து ஏற்பட்டதில் அதில் வந்த இருவர் இறந்துவிட்டனர். ஒருவர் காயமடைந்துவிட்டார். இந்த விபத்து சம்மந்தமாக குற்ற வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கில் நான் நிரபராதி என்று தீர்ப்பானது. அதன் தீர்ப்பு நகலை நான் தற்போது தாக்கல் செய்கிறேன். அந்த **தீர்ப்பு நகல் எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி விபத்திற்கு நான் காரணமல்ல.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் டிராக்டருக்கு நான்தான் ஓனர் என்றால் சரிதான். அப்போது நான் தான் டிராக்டரை ஓட்டிவந்தேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். டிராக்டருக்கு முறையாக காப்பீடு விபத்து சமயத்தில் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை அங்கு ஏன் நிறுத்தியிருந்தேன் என்றால வாகனம் பஞ்சரானதால்

நிறுத்தினேன். விபத்து சமயத்தில் நான் வாகனத்தில் சமிஞ்கை எதுவும் செய்யாமல் நிறுத்திவைத்திருந்தேன் என்றாலும் சாலையில் வருபவர்கள் பாதுகாப்பாக எனது வாகனத்தை கடந்து செல்வதற்கு போதிய உபகரணங்களை சம்பவயிடத்தில் நான் வைக்கவில்லை என்றாலும் போக்குவரத்து விதியை மீறி சாலையிலேயே வாகனத்தை நிறுத்தி வைத்திருந்ததாலும் என் அஜாக்ரதையால்தான் இவ்விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் மனுதாரரின் கணவரும் அவரது மகனும் விபத்து நடந்த இடத்திலேயே இறந்துவிட்டார்கள் என்றாலும் நானும் காப்பீட்டு நிறுவனத்தாரும் சேர்ந்துதான் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–வெங்கடேசன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.